# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 14,720/9 — 1966 නොවැම්බර් 8 වැනි අඟහරුවාද — 1966.11.8**

**14,720/9 ம் இலக்கம்—1966 ம் ஆண்டு** நவெம்பர் **மாதம் 8 ந் திகதி** செவ்வாய்க்கிழமை

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி IV — உள்ளூராட்சி

## உள்ளூராட்சி அறிவிப்புகள்

### பட்டினசபைகள் கட்டளைச்சட்டமும் உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டமும்

(256 ஆம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச்சட்டத்தின் 10 ம் பிரிவின்பிரகாரமும் (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரச்சபைத் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் 84 ம் பிரிவின் பிரகாரமும் உள்ளூராட்சி அமைச்சருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி அவரால் இடப்பட்ட கட்டளை.

கொழும்பு,
1966 ம் ஸ்ரீ நொவம்பர் மீ 8 ந் வ.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

**கட்டளை**

1. தற்பொழுது பதவியில் இருக்கும் ஙிங்குராக்கொடை பட்டனசபை அங்கத்தவர்களின் பதவித்தவணை முடிவடையும் தேதியானது டிசெம்பர் 31, 1966 என உள்ளதற்குப் பதிலாக ஜூன் 30, 1967 என இத்தால் நியமிக்கப்படுகிறது.

2. (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரச்சபைத் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் 1966 ம் ஆண்டு டிசெம்பர் 31 ம் தேதி அன்று அல்லது அதற்குமுன் மேற்குறிக்கப்பட்ட பட்டினசபை அங்கத்தவர்களைத் தெரிந்தெடுப்பதற்கு தேவையான பொதுத்தேர்தல் ஒன்றை நடாத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்யாவும் செல்லுபடியாகாதவையும் எவ்விதபயனுமற்றவையாவதோடு அவ்விதமே எக்காலத்திலும் கருதப்படுதலும் வேண்டும்.

3. (262 ம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரச்சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் மேற்குறிப்பிட்ட பட்டினசபை அங்கத்தவர்களை தெரிந்தெடுப்பதற்கு ஒருபொதுத்தேர்தலை 1966 ம் ஆண்டு டிசெம்பர் 31 ம் தேதி அன்று அல்லது அதன்முன்னர் நடாத்த மேற்கொண்டும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படலாகாது.


இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது